இந்திய உயர் ஸ்தானிகராலயம்
கொழும்பு

ஊடக அறிக்கை

இலங்கையின் மீன்பிடித்துறை சங்கங்களின் அதிகாரிகளுக்கான ஆளுமை விருத்தி செயல்திட்டம்

இலங்கை அரசாங்கத்தின் மீன்பிடி, நீரியல் மற்றும் சமுத்திர வளங்கள் அமைச்சின் கீழான பல்வேறு மீன்பிடித்துறை சங்கங்களினதும் 20 அதிகாரிகளைக் கொண்ட பேராளர்கள் குழு ஒன்று 2026 செப்டெம்பர் 15-22 வரை மஹாராஷ்திராவின் புனேவில் உள்ள கூட்டுறவு முகாமைத்துவத்துக்கான வைகுந் மேஹ்தா தேசிய நிறுவகத்தில் (VAMNICOM) நடைபெற்ற ஆளுமை விருத்தி மற்றும் அறிவுப் பகிர்வு நிகழ்ச்சித்திட்டத்தில் பங்கேற்றிருந்தது.

2. இலங்கையில் உள்ள மீன்பிடி சங்கங்களின் நிறுவக, முகாமைத்துவ மற்றும் தொழில் முனைவு திறனை மேம்படுத்தும் நோக்கில் இந்த நிகழ்ச்சித்திட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது. இது, நடைமுறை சாத்தியமான, வர்த்தக நோக்குடைய மற்றும் ஸ்திரத்தன்மை கொண்ட கூட்டுறவு நிறுவனங்களின் வளர்ச்சியை ஆதரிப்பதையும் இலக்காக கொன்டதாகும்.

3. மேலும், கூட்டுறவு நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம், மீன்பிடி கூட்டுறவு சங்கங்களை உருவாக்குதல் மற்றும் வலுப்படுத்துதல், கூட்டுறவு வர்த்தக மாதிரிகள் மற்றும் வாழ்வாதார அபிவிருத்தி, மீன்வள முகாமைத்துவம் மற்றும் நிலையான மீன் வளர்ப்பு, மீன்வள பெறுமதிச் சங்கிலிகள், மீன்களை பதநிலைப்படுத்தல் மற்றும் பெறுமதி அதிகரிப்பு, தரக் கட்டுப்பாடு மற்றும் பதப்படுத்தும் நடைமுறைகள், கூட்டுறவுப் பொருட்களின் சந்தைப்படுத்தல் மற்றும் வர்த்தக நாம பிரயோகம், தொழில்முனைவு மற்றும் நிதி முகாமைத்துவம், தலைமைத்துவம் மற்றும் நிறுவன ரீதியான அபிவிருத்தி, மற்றும் வெற்றிகரமான இந்தியக் கூட்டுறவு அமைப்புகளிடமிருந்து சிறந்த நடைமுறைகளைப் பகிர்ந்துகொள்ளுதல் தொடர்பான தொழில்நுட்ப மற்றும் நடைமுறை ரீதியான ஒரு தொகுதி அமர்வுகளை இந்த நிகழ்ச்சித்திட்டம் உள்வாங்கியுள்ளது.

4. மேலும், கூட்டுறவு அடிப்படையிலான வர்த்தக நடவடிக்கைகள், பெறுமதி சேர் செயற்பாடுகள், தொழில்நுட்ப இணைப்புகள் மற்றும் சந்தை தொடர்புகள் குறித்த உள்ளீடுகளைப் பெற்றுக்கொள்வதற்காக முன்னணி மீன்பிடி, பாலுற்பத்தி, விவசாய மற்றும் விவசாய உற்பத்தி பதப்படுத்தல் கூட்டுறவு நிறுவனங்களுக்கும் இப்பேராளர்கள் விஜயம் மேற்கொண்டிருந்தனர்.

5. இந்தியா – இலங்கை இடையிலான தற்போதைய திறன் அபிவிருத்தி ஒத்துழைப்பு திட்டங்களின் அங்கமாக இந்த நிகழ்ச்சித் திட்டம் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. 2025 ஏப்ரலில் இந்திய பிரதமர் ஸ்ரீ நரேந்திர மோடி அவர்கள் இலங்கைக்கு மேற்கொண்டிருந்த உத்தியோக பூர்வ விஜயத்தின்போது இலங்கை அதிகாரிகள் 700 பேருக்கு வருடாந்தம் இவ்வாறான தனிப்பயனாக்கப்பட பயிற்சிகள் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்ட நிலையில் இதன் மூலமாக இப்பங்குடைமையானது மேலும் வலுவடைந்தது. இந்தியாவின் நல்லாட்சிக்கான தேசிய நிலையம் மற்றும் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம் (SLIDA) இடையில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் கீழ் 300 இலங்கையின் சிவில் சேவை அதிகாரிகள் வருடாந்தம் பயிற்றுவிக்கப்படுகின்றனர். அதன் அடிப்படையில் இந்தியாவின் ஆளுமை விருத்தி திட்டம் மூலமாக தற்போது வருடாந்தம் 1000 இலங்கையர்கள் நன்மை அடைகின்றனர்.

****

கொழும்பு
22 செப்டெம்பர் 2026